REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 டிசம்பர் 28 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

தினகரன்

வரு. 88 இல. 308 | December 28, Monday, 2020 | 16 பக்கங்கள் | 30/-

## கொழும்பில் டாம் வீதி, வாழைத்தோட்டம், மருதானை இன்று விடுவிப்பு

இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பில் தற்போது அமுலிலுள்ள சில பகுதிகளின் தனிமைப்படுத்தல் ஊரடங்கு இன்று 28 ஆம் திகதி காலை தளர்த்தப்படவுள்ளதாக இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். 06

சுகாதார வழிகாட்டலுக்கமைய

## திரையரங்குகளை ஜனவரி முதல் திறக்க பிரதமர் அறிவுறுத்தல்



சுகாதார வழிகாட்டல்களுக்கமைய ஜனவரி முதலாம் திகதி முதல் நாடு முழுவதுமுள்ள திரையரங்குகளை திறப்பதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுமதியளித்துள்ளார். அதற்கமைய தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து பிரதேசங்களிலுமுள்ள திரையரங்குகளே திறக்கப்படும். திரையரங்குகள் மூடப்பட்டுள்ளமையினால் கலைக்கும், கலைஞர்களுக்கும் 06

ஜனாதிபதி கோட்டாபயவின் அதிரடி கள விஜயம்;

## அனுராதபுர பகுதியில் படைப்புழு தாக்கம் குறித்து நேரடியாக சென்று பார்வை



சோளப் பயிர்ச்செய்கையில் படைப்புழுக்களின் தாக்கம் அதிகரித்திருப்பது தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேரடியாக சென்று பார்வையிடுவதற்காக அனுராதபுரம், பஹலகம என்ற இடத்திற்கு (26) அதிகாலை கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இங்கு படைப்புகளின் தாக்கத்தால் அழிவடைந்து கிடக்கும் சோளப் பயிர்ச்செய்கையை நேரடியாக அவதானித்தார்.

படைப்புழுக்களின் தாக்கம் அதிகரித்ததன் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக விவசாயிகளின் சோளப் பயிர்ச்செய்கை

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில்

## நாட்டுக்கு எதிரான எந்தவொரு பிரேரணைக்கும் அடிபணிய மாட்டோம்

ஜனாதிபதியின் கொள்கையில் மாற்றமில்லை என்கிறார் சரத்



நாட்டுக்கு எதிரான பிரேரணைகளுக்கு அடிபணிய மாட்டோம். நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் 30/1 பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கு வதில் இருந்து விலகி சுயாதீனத்தன்மையி கொண்டே அரசாங்க லும் செயற்படும் என மக்கள் பாதுகாப்பு அ




ஆயிரக்கணக்கானோரி ... தொற்று

# PCR பரிசோதன ... டாத புதிய வைரஸினால் பாரிய சிக்கல்

சுகாதார தரப்பினரை திக்குமுக்காட வைத்துள்ளதாக Dr.சுதத் சமரவீர கருத்து

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கொரோனா வைரஸானது எவ்வித அறிகுறிகளுமின்றி உடலில் எவ்வித மாற்றங்களையும் காண்பிக்காமல் ஆயிரக்கணக்கானோரிடம் பரவியுள்ளது. எனவே தற்போது நபரொருவருக்கு வைரஸ் தொற்று ஏற்படுமாயின் அவருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதா அல்லது புதிய வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதா என்பதை பி.சி.ஆர். பரிசோதனையின் ஊடாகக் கூட உறுதிப்படுத்த முடியாது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,...

ஒக்டோபர் 4 ஆம் திகதி நாட்டில் ஆரம்பமான இரண்டாம் அலை இரு மாதங்களில் தீவிரமாக பரவலடைந்துள்ளது. எனினும் இதனை மேலும் கட்டுப்படுத்த மக்களின் முழுமையான ஒத்துழைப்பு அத்தியாவசியமானதாகும். வைரஸ் அதன் தன்மையை மாற்றி புதிய வகை வைரஸாக 06

### புதுக்குடியிருப்பில் மிக வீரியம் கூடிய வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு



**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளரின் வைரஸ் மிகவும் வீரியம் கூடியதாக காணப்படுவதாக வடமாகாண சுகாதார சேவைகள் 06

## 16 வயது சுனாமி பேபி அபிலாஷ் மறைந்த உறவுகளுக்கு அஞ்சலி



சுனாமி தாக்கத்தினால் காணாமல் போய் பின்னர் வைத்தியசாலையில் கண்டுபிடிக்கப்பட்ட அபிலாஷ் தனது இல்லத்தில் வைத்துள்ள சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் தூபியில் நேற்று 06

## மீன்பிடி துறைமுகத்தில் சிக்கிய 25,000 Kg மஞ்சள்

கலமெட்டியவில் நால்வர் கைது

ஹுங்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கலமெட்டிய மீன்பிடி துறைமுகத்தில் நேற்று (27) அதிகாலை பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின் போது சட்டவிரோதமாக இந்நாட்டுக்கு எடுத்துவரப்பட்ட உலர்ந்த 25,000 கிலோ மஞ்சள் தொகையுடன் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

ஹுங்கம – கலமெட்டிய மீன்பிடித் துறைமுகத்தில் கைப்பற்றப்பட்ட 25,000 கிலோ 06

முஸ்லிம் கட்சிகள் எமக்கு தேவையா?

## சமூகம் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென்கிறார் இம்ரான் எம்.பி

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**



முஸ்லிம் கட்சிகள் நமக்குத் தேவையா என்பதை சமூகம் மீள்பரிசீலனை செய்ய வேண்டுமெனத் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

மறைந்த தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்பினால் பல்வேறு காரணங்களை முன் வைத்து முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டது. 06

## கொட்டகலையில் ஒன்றரை வயது சிசு உட்பட 07 பேருக்கு தொற்று உறுதி

60 பேருக்கு மேற்கொண்ட PCR முடிவில் உறுதி



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஒன்றரை வயது சிசு உட்பட ஏழு பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கொட்டகலை பொது சுகாதார பரிசோதகர் எஸ்.சௌந்தர்ராகவன் தெரிவித்தார்

கடந்த 23 ஆம் திகதி கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி அதிகாரப் பகுதிக்குட்பட்ட 06

கொரோனா மரணங்கள்

## பொய் செய்திகளை பரப்ப வேண்டாம்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணிப்பவர்கள் தொடர்பில் போலியான செய்திகள் வெளியிடுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு கேட்டுக் கொண்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணிக்கும் நபர்களின் சடலத்தை அடக்கம் செய்வது அல்லது தகனம் செய்வது தொடர்பாக சில அரசியல்வாதிகளும் சில இணையத்தளங்களும் தவறான 06

சில ஊடகங்களும் சில அரசியல்வாதிகளும்

முதலமைச்சராக்க முனையும் பலர்;

ஜனாஸா எரிப்பு விவகாரத்தில்